ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2302/16 - 2022 ඔක්තෝබර් මස 18 වැනි අඟහරුවාදා - 2022.10.18

2302/16 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 18 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

எனது இல.: ATU/LND/04/DO/55.
காணி அமைச்சின் இல.: 4-3/5/2019/HA/625.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணித் துண்டை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மாத்தறை மாவட்டம், அதுரலிய பிரதேச செயலாளர் பிரிவில், வேனகம எனும் கிராம அலுவலர் பிரிவில், வெலிஹேன என்ற கிராமத்திலமைந்துள்ள மாத்தறை நில அளவை மாஅதிபரின் வன அளவை ஆரம்பப்பட இலக்கம் மாற 83 இலே விபரிக்கப்படும் கீழ்வரும் காணியின் எல்லைகள்.

1. துண்டு இல. 487

காணியின் பெயர்: வெலிஹேனகாடு; விபரம்: வீட்டுத்தோட்டம், நிரந்தரக் கட்டிடம் உண்டு; உரிமை கோருவோர்: திரு. மாதற கமகே ஹேமபால, இல. 27, ஜயவர்த்தனபுர, போரதொட்ட, கொடபிடிய; விஸ்தீரணம்: 0.0123 ஹெக்டயார்.

மேற்குறித்த காணித் துண்டுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு, அதுரலிய பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும்படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணித் துண்டை எடுத்ததற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கையின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும் அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2022 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

நிரோஷா எஸ். கமகே,
பிரதேச செயலாளர்,
அதுரலிய.

பிரதேச செயலகம்,
அதுரலிய,
2022, ஒற்றோபர் 10.

EOG 10 - 0122

1A - G 37778 - 16 (2022 /10) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

*மு. கு. - இவ் அதிவிஷேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*